DINAMALAR

3 FEB 2023

PAGE 4



# பல்கலை., பேராசிரியருக்கு ஆராய்ச்சி உதவித் தொகை



ஹங்கேரி அரசின் ஆராய்ச்சி உதவித் தொகை பெற்ற புதுச்சேரி பல்கலைக் கழக பேராசிரியர் உஜ்வல் ஜனாவை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, பிப். 3–**

புதுச்சேரி பல்கலைக் கழக பேராசிரியர் ஹங்கேரி அரசின் ஆராய்ச்சி உதவித் தொகை பெற்றார்.

புதுச்சேரி பல்கலைக் கழக ஆங்கிலப் பேராசிரியர் உஜ்வல் ஜனா. இவருக்கு, 2022–23ம் ஆண்டிற்கான ஹங்கேரி அரசின் ஆராய்ச்சி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதனையொட்டி, பேராசிரியர் உஜ்வல் ஜனாவை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

இவர், ஏற்கனவே, கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக் கழகத்துடன் 2019–23ம் ஆண்டிற்கு ஒத்துழைக்க ஹங்கேரி அரசிடம் விருது பெற்றுள்ளார்.

இவர், அமெரிக்காவின் ப்ளூமிங்டனில் உள்ள இந்தியானா பல்கலைக் கழகம் மேற்கொள்ளும் இந்திய ஆய்வு திட்டத்தின் சிறப்பு வருகை விரிவுரையாளராக 2007 – 08ல் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

DINAKARAN

3 FEB 2023

PAGE 15



# புதுவை பல்கலை. பேராசிரியருக்கு ஹங்கேரி அரசின் விருது

## துணைவேந்தர் பாராட்டு



▶ புதுவை பல்கலைக்கழகத்தில் ஹங்கேரி அரசின் விருது பெற்றுள்ள பேராசிரியரை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

புதுச்சேரி, பிப். 3: புதுச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

புதுவை பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியரான டாக்டர்.உஜ்வல் ஜனா, 2022-2023ம் ஆண்டிற்கான ஹங்கேரிய மாநிலத்தின் விருது மற்றும் உதவித்தொகையை பெற்றுள்ளார். இவர் ஹங்கேரி அரசாங்கத்தின் டெம்பஸ் அறக்கட்டளையால் நிதியளிக்கப்பட்ட புடாபெஸ்ட் ஹங்கேரியில் உள்ள இட்வோஸ் லோரன்ட் பல்கலைக்கழகத்தின் எலைட் ஆங்கில ஆய்வுத்துறையில் ஒரு கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள உள்ளார். கடந்த மாதம் டெல்லியில் உள்ள பப்ளிஷிங் ஹவுஸ் ஏபிஎஸ் புக்ஸ் உடன் டிஜிட்டல் ஹியுமானிட்டீஸ் பற்றிய ஒரு தொகுப்பை டிஜிட்டல் கலாசார மனிதநேய சமகால போக்குகள் என்ற தலைப்பில் திருத்தியுள்ளார். அதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. அவர் இந்திய பொயெட்டிக்ஸ், கிரிட்டிக்கல் ஹியுமானிட்டீஸ் மற்றும் மொழிபெயர்ப்பு ஆய்வுகள் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். மேலும் பல ஆய்வுக் கட்டுரைகளை சக மதிப்பாய்வு செய்யப்பட்டு தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் வெளியிட்டுள்ளார். அவரது மேற்பார்வையின் கீழ், 5 அறிஞர்களுக்கு பிஎச்டி வழங்கப்பட்டது. இவர் கடந்த 2014ல் டிராவல் கிராண்ட்ஸ் விருது பெற்றுள்ளார். அவருக்கு இந்திய அரசின் கல்வி அமைச்சகம், டிஜிட்டல் ஹியுமானிட்டீஸ் சர்வதேச கூட்டுத் திட்டத்தின் மூலம் ஆஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்துடன் இணைந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு நிதியுதவியை வழங்கியுள்ளது. புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங், ஹங்கேரி அரசிடமிருந்து விருது பெற்றதற்காக டாக்டர் ஜனாவை வாழ்த்தி பாராட்டினார்.